# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். **139/2015**

ஆணை எண். **190/2016**

நாள் : **03/12/2016**

திரு. பி. பாலமுருகன்.
தலைவர்,
கட்டிட பொறியாளர்கள் நிறுவனம்
சென்னை –33

**– முறையீட்டு மனுதாரர்**

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்.

**– எதிர் மனுதாரர்**

சென்னை, மேற்கு மாம்பலம், லேக்வியூ சாலை, எண்.168/177–ல் செயல்பட்டுவரும் கட்டிடப்பொறியாளர்கள் நிறுவனத்தின் தலைவர் திரு. பி. பாலமுருகன் அவர்களது 27.06.2015 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.07.2015 அன்று பெறப்பட்டு 139/15 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

<u>ஆணை</u>

சென்னை, மேற்கு மாம்பலம், லேக்வியூ சாலை, எண். 168/177–ல் செயல்பட்டு வரும் கட்டிடப்பொறியாளர்கள் நிறுவனத்தின் தலைவர் திரு. பி. பாலமுருகன் அவர்கள் கோவை மாநகராட்சியில் அனுமதியின்றி கூடுதல் தளங்கள் கட்டப்பட்ட விக்னேஸ்வரா கிரெஸ்டா கட்டிடம் தீ விபத்துக்குள்ளானது என்றும், அனுமதியின்றி கட்டப்பட்ட கூடுதல் தளங்கள் உருவாக காரணமான அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், கட்டிடம் இடிப்பதற்கான இழப்பீட்டுத் தொகையை சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்தே வசூலிக்கப்படவேண்டும் என்றும் இம்முறைமன்ற நடுவத்தில் முறையிட்டிருந்தார். 29.06.2015 அன்று மனுதாரரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. விசாரணையின்போதுது அனுமதிக்கப்படாத 2 மற்றும் 3 தளம் கட்டுவதற்கு துணைபுரிந்த உள்ளூர் திட்டக்குழும அதிகாரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட பொறியாளர்கள் மாநகராட்சி அதிகாரிகள் ஆகியோரிடம் இழப்பீடு பணத்தை வசூல் செய்வதோடு இது போன்ற அனுமதியற்ற கட்டிடங்கள் கட்டுவதற்கு அனுமதி அளித்து தொடர்ந்து வணிக வளாகமாக பயன்படுத்த சம்மதித்த சம்பந்தப்பட்ட அனைத்து துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், தீ விபத்து ஏற்படாமல் இருந்திருந்தால் இந்த முறைகேடு வெளிச்சத்திற்கு வராமலே போய் இருக்கும் என்றும் தெரிவித்தார்.

2. அனுமதியின்றி கட்டப்பட்ட பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து மற்றும் உயிரிழப்பு சம்பந்தமாக கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது :-

*25.04.2013 அன்று கட்டிடத்தில் ஏற்பட்ட தீ விபத்தைத் தொடர்ந்து, திட்ட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டிடம் குறித்த அறிவிப்பினை, கோவை திட்டக்குழுமம் 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டப் பிரிவுகள் 56 மற்றும் 57–ன் கீழ் கட்டிட மேலாளருக்கு 25.04.2013 அன்று வழங்கப்பட்டதென்றும், இதில் அனுமதிக்கு மாறாக அனுமதியற்ற கட்டிடத்தின் கட்டுமான பகுதிகளை இடித்து அப்புறப்படுத்தும்படி தெரிவிக்கப்பட்டது என்றும், ஆனால் கட்டிட உரிமையாளர் எந்தவித நடவடிக்கையும் எடுக்காததால் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆணையின்படி மேற்படி சட்டப்பிரிவுகளின் கீழ் அனுமதியற்ற கட்டுமான பகுதிகளை இடித்து அப்புறப்படுத்தும் நடவடிக்கையினை 31.05.2013 அன்று கோவை உள்ளூர் திட்டக்குழுமம் மேற்கொண்டதாக கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையர் தனது 22.02.2016 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். மேலும், சென்னை நகர் ஊரமைப்பு ஆணையரின் 26.08.2014 நாளிட்ட கடிதம் எண்.2004/2014/ பிபி2–ல், அனுமதியற்ற கட்டுமானங்களை இடித்து அப்புறப்படுத்துதல் தொடர்பான பணிகளுக்கு, உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் இணக்கத்தினை பெற்று, அனுமதியற்ற கட்டிடத்தின் கட்டுமானப் பகுதிகளை இடித்து அப்புறப்படுத்தும் பணிகளுக்கு கோவை உள்ளூர் திட்டக்குழுமம் நிதியிலிருந்து தற்காலிக செலவினம் மேற்கொள்ளவும், இந்த செலவினத்தை கட்டிட உரிமையாளர்களிடமிருந்து வசூலித்து உள்ளூர் திட்டக்குழுமம் அலுவலகக் கணக்கில் சேர்க்கவும் அதன் அடிப்படையில் 30.12.2015 நாளிட்ட அரசின், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் அரசாணையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.*

3. அனுமதியின்றி கட்டப்பட்ட மூன்றாம் தளத்தில் 25.04.2013 அன்று தீ விபத்து ஏற்பட்டுள்ளது. தீ விபத்து ஏற்பட்ட நாள்வரை மேற்படி கட்டிடத்தில் அனுமதியின்றி கட்டப்பட்ட தளங்கள் கண்டறியப்படவில்லை. இக்கட்டிடம் கட்டுவதற்கு 1999–ஆம் ஆண்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஒப்புதல் வழங்கப்பட்ட 1999–ஆம் ஆண்டிலிருந்து தீ விபத்து ஏற்பட்ட 25.04.2013க்கு இடைப்பட்ட காலத்தில் அனுமதியின்றி கூடுதல் தளங்கள் எப்பொழுது கட்டப்பட்டன என்ற விபரம் தெரியவில்லை எனினும், தீ விபத்து ஏற்பட்ட பின்பே அனுமதியற்ற கட்டுமானப் பகுதிகளை நீக்கிடவும் திட்ட அனுமதி கோரி கட்டிட உரிமையாருக்கு விண்ணப்பிக்கக்கோரியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

4. முறையற்ற கட்டுமானப் பகுதிகளைக் கண்டறிந்திருந்தால் தீ விபத்து நிகழாவண்ணம் தடுத்திருக்க இயலும். எனவே, அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டுமானப் பகுதிகளை கண்டறியத் தவறிய மாநகராட்சி பணியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக ஆணையரை கேட்டுக்கொண்டு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2016 ஆம் [illegible] திங்கள் 3– ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை–5 (இணைப்புடன்)

ஆணையர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,கோயம்புத்தூர்.

நகல்
திரு பி.பாலமுருகன்,
தலைவர்,
கட்டிட பொறியாளர்கள் நிறுவனம்,சென்னை – 33.

/உண்மை நகல்/

செயலாளருக்காக.